# துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

## செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு

### பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்தி செயற்றிட்டம் கட்டம் II படிநிலை 2

## வெற்றிடங்கள் (ஒப்பந்த அடிப்படையில்)

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய (BIA) அபிவிருத்தி செயற்றிட்டம் என்பது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வசதிகளை மாற்றியமைத்து விரிவுபடுத்துவதை இலக்காகக் கொண்ட ஒரு முக்கிய முயற்சியாகும். ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனம் (JICA) இந்த திட்டத்திற்கு நிதியளிக்கிறது, இது அதிநவீன மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய அதிநவீன புதிய முனைய கட்டிடத்தை நிர்மாணிப்பதை உள்ளடக்கியது. இந்த திட்டம் முனையத்தை மட்டுமல்ல, இயந்திரவியல், மின்சாரம் மற்றும் பிளம்பிங் (MEP), தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் ஜப்பானிய பொறியியல் ஆலோசனையுடன் சிவில் இன்ஜினியரிங் கட்டுமானங்கள் உள்ளிட்ட தொடர்புடைய வேலைகளின் முழு வண்ணத்தையும் உள்ளடக்கியது.

நிதி அமைச்சின் 1/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மேற்கூறிய செயற்றிட்டத்திற்கான பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த, இலங்கையின் ஆற்றல் மிக்க பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

### 1. சிவில் பொறியியலாளர் (Civil Engineer) - 02 பதவிகள்

**தகைமைகள்: (பின்வரும் i அல்லது ii)**

i. பல்கலைக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சிவில் பொறியியல் துறையில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

சிவில் பொறியியல் துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையாக UGCயினால் அங்கீகரிக்கப்படும் தகைமை.

**அல்லது**

இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிகரான தொழில்சார் தகைமை அல்லது ஒரு இணை அங்கத்துவம்

**அத்துடன்**

இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் 09 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**அல்லது**

ii. நாடளாவிய அரசாங்க சேவையின் III/II ஆம் வகுப்பு அதிகாரி அல்லது இயைபுடைய துறையில் நிகரான நிலைமை.

**அத்துடன்**

III/II ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் 09 வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**சம்பளம்: நிலை PS 4 - ரூபா 155,000.00 + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்**

### 2. சிரேஷ்ட பிரமான அளவையாளர் (Senior Quantity Surveyor) - 01 பதவி

**தகைமைகள்: (பின்வரும் i, ii அல்லது iii)**

i. பல்கழை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பிரமான அளவையியலில் இளமானிப் பட்டம் அல்லது இலங்கை பிரமான அளவையாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

சிவில் பொறியியல் துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையாக UGC ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமை.

**அல்லது**

இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிகரான தொழில்சார் தகைமை அல்லது ஒரு இணை அங்கத்துவம்

**அல்லது**

பதவிக்கு இயைபான தொழில்நுட்ப துறைக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

தேவையான நிபுணத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 06 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**அல்லது**

ii. பதவிக்கு இயைபான தொழில்நுட்ப துறைக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

பிரமான அளவையியலில் நிபுணத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 11 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**அல்லது**

iii. பதவிக்கு இயைபான தொழில்நுட்ப துறைக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

தேவையான நிபுணத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 16 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**சம்பளம் : நிலை PS 5 - ரூபா 105,000.00 + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்**

### 3. தொழில்நுட்ப அதிகாரி (Technical Officer) - 01 பதவி

**தகைமைகள்: (பின்வரும் i, ii அல்லது iii)**

i. ப.மா. ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சிவில் பொறியியல் துறையில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அல்லது**

பதவிக்கு இயைபான தொழில்நுட்ப துறைக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

சிவில் பொறியியல் துறையில் குறைந்தபட்சம் 04 வருடகால அனுபவம்.

**அல்லது**

ii. பதவிக்கு இயைபான தொழில்நுட்ப துறைக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

சிவில் பொறியியல் துறையில் குறைந்தபட்சம் 09 வருடகால அனுபவம்.

**மற்றும்**

iii. பதவிக்கு இயைபான தொழில்நுட்ப துறைக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

சிவில் பொறியியல் துறையில் குறைந்தபட்சம் 14 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**சம்பளம் : நிலை PS 6 - ரூபா 67,000.00 + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்**

### 4. கணக்கியல் உதவியாளர் (Accounts Assistant) - 01 பதவி

**தகைமைகள்: (பின்வரும் i அல்லது ii)**

i. UGCயினால் அங்கீகரிக்கப்படும் கணக்கியல் / நிதியியலில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

ii. ICAS/ CIMA/ ACCA/ CMA.இற்குச் சமமான தகைமை அல்லது இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் / உரிமச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கணக்கியல் / நிதியியல் துறையில் குறைந்தபட்சம் 04 வருடகால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**சம்பளம் : நிலை PS 6 - ரூபா 67,000.00 + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்**

வயது : 1, 2 மற்றும் 4 பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படும் இறுதி நாளில் 64 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

3ஆம் இலக்கப் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படும் இறுதி நாளில் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

மேலதிக அனுபவம் / தகைமைகள்

**முன்னுரிமை:**

பின்வருவனவற்றைக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

i. வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களில் உள்ள அனுபவம்

ii. 1 முதல் 3 வரையிலான பதவிகளுக்கு ஒப்பந்த விதிகளின் மறுமொழிகளின் விளக்கம் பற்றிய உரிமைக் கோரல்களை மதிப்பிடல் தொடர்பான திறமை

iii. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் அங்கத்துவம்

iv. 1 முதல் 3 வரையிலான பதவிகளுக்கு AutoCAD மற்றும் MS Project அல்லது சமமான திறமை.

**பொதுவான நிபந்தனைகள்:**

ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) 8% பங்களிப்பைச் செய்தல் வேண்டும் என்பதுடன் தொழில் வழங்குநர் ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% பங்களிப்பைச் செய்வார்.

**வேலை வாய்ப்பு விதிகள்:**

ஊழியர்கள் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர் மற்றும் திருப்திகரமான செயற்றினின் பேரில் வருடாந்தம் புதுப்பித்துக் கொள்ளலாம்.

வேலை செய்யும் இடமானது:

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு,**
**மினுவாங்கொட வீதி, நைகந்த, கட்டுநாயக்க.**

**விண்ணப்பங்கள்:**

கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் உறவினரல்லாத சான்றுபகர்வோர் இருவரின் விபரங்கள் சகிதம் சுய தரவுடனான விண்ணப்பங்களை 2024 ஜூலை 01ஆம் திகதி அல்லது அதற்கு முன் செயலாளர், விமான சேவைகள் பிரிவு, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, 30ஆம் தளம், மேற்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு-01 எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

அரசாங்கம் / அரச சார்ப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறும்பட்டியலிடப்பட்டு நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

**செயலாளர்,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**30ஆம் தளம்,**
**மேற்குக் கோபுரம், உலக வர்த்தக மையம்,**
**கொழும்பு-01**